Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

Nallur Branch Library

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | வைகாசி 31 | 14 - 06 - 94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 116

## முறைசாரா கல்வி பெற்றவருக்கு வேலைவாய்ப்பு வழங்க முயற்சி

முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சி பெற்று வேலையற்றிருப்போருக்கு வேலைவாய்ப்பு வழங்க பல நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக யாழ்ப்பாண கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறு வேலைவாய்ப்பை பெற சம்மதிக்காத பட்சத்தில் அவர்கள் சுயதொழில் முயற்சியை ஆரம்பிக்க முன்வந்தால் அவர்களுக்கு வைப்பகங்கள் ரூபா 10,000 (6-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு தாக்குதல் படைகள் விஜேதுங்காவினால் புனரமைப்பு

(கொழும்பு)

யுத்தத்துடன் தொடர்புடைய விசேட தாக்குதல் படைகளை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா புனரமைப்பு செய்துள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்திற்கான முதலாவது விசேட தாக்குதல் படைக்கு பிரிகேடியர் ஏ.கே. ஜெயவர்த்தனாவும் வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய இரண்டாவது தாக்குதல் படைக்கு பிரிகேடியர் ஏ. எஸ். பீரிசும், திருகோணமலை, மணலாறு பகுதிகளை உள்ளடக்கிய மூன்றாவது தாக்குதல் படைக்கு பிரிகேடியர் நளின் அங்கமனவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பிரிகேடியர் லால் விஜயசேகர விசேட தாக்குதல் படையின் றிசர்வ் படைக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் பிரிகேடியர் சிவ சண்முகம் மாஸ்ரர் ஜெனரலாகவும், பிரிகேடியர் டபிள்யூ எம்.பி. பெர்னாண்டோ பொதுத் தலைமையக ஜெனரலாகவும், பிரிகேடியர் எஸ்.ரி.ரி. ஜயசுந்தர குவாட்டர் மாஸ்டர் ஜெனரலாகவும், பிரிகேடியர்

( 5 ஆம் பக்கம் பார்க்க )



## அதிகாலை பேராசிரியர் பூதவுடல் யாழ். வந்தது

பேராசிரியர் துரைராசாவின் பூதவுடல் இன்று அதிகாலை 12. 50 மணிக்குயாழ். பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர்ந்தது.

யாழ். பல்கலைக்கழகம் வந்தடைந்த பேராசிரியரின் பூதவுடல் தாங்கிய பேழை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் குணரட்ணம் அவர்களால் கையேற்கப்பட்டது. பின்னர் பேழை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் குழாத்தினால் கைலாசபதி கலையரங்கத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. அப்பொழுது யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மலர் தூவினர்.

மறைந்தபேராசிரியர் துரைராசாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று மாலை முதல் பொதுமக்களும் மாண

(5ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் துணிகரத் தாக்குதல்

# காரைநகரில் 4 கடற்படை பலி

## மேலும் 6 பேர் காயம் என அறிவிப்பு

[கொழும்பு]

பூரணமாக சிறிலங்கா கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகக் கூறப்படும் காரைநகர் தீவினுள் விடுதலைப் புலிகள் துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட இத் தாக்குதலில் நான்கு கடற்படையினர் பலியானதாகவும், ஆறு சிப்பாய்கள் படு காயமடைந்ததாகவும், வாகனம் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா கடற்படையின் தாக்குதலுக்குள்ளான வாக க்கு உதவிக்கு விரைந்த படை தெரிவிக்கின்றன.

## துப்பாக்கி சூட்டிற்கு மீனவ இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகு நோக்கி மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்திற்கு மீனவர் ஒருவர் பலியானார்.

நேற்று இரவு 9.30 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தின்போது பாஷையூரைச் சேர்ந்த குருகுலம் ஜெகன் (வயது 15) என்பவரே இராணுவத்தினரின் துப்பாக்கி பிரயோகத்தால் கழுத்து பகுதியில் படுகாயமடைந்து பலியானார். இவரது உடல் இவருடன் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களால் யாழ். போதனா மருத்துவமனைக்குஎடுத்துவரப்பட்டது

## கொழும்புத்துறை குடியிருப்புகள் மீது நேற்று மாலை எறிகணை வீச்சு

### குழந்தைஉட்படஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்

(நமது நிருபர்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கொழும்புத்துறை பகுதி மக் முதலாவது எறிகணை கடலினுள் வீழ்ந்து வெடித்தது. இரண்டாவது எறிகணை அப்பகுதியில் உள்ள வீடொன்றின் தென்னைமரத் டாக பிளந்து வீழ்ந்ததுடன் குழந்தை உட்படநால்வர் படுகாயமடைந்தனர்.

மூன்றாவது எறிகணை அப்பகுதியிலுள்ள வளவொன்றி

சிறிலங்கா கடற்படையின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகக் கூறப்படும் காரைநகர் தீவுப்பகுதிக்குள் ஒருவார காலத்திற்குள் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும். கடந்த ஆறாம்திகதி விடுதலைப் புலிகள் இப்பகுதிக்குள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலின் பின் இத்தாக்குதல் நடைபெற்றது. இதேசமயம் ஆறாம் திகதித் தாக்குதலின் பின்னர் தீவுப் பகுதியில் இராணுவத்தினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, படைகள் உசார் நிலையிலும் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாகப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த வேளையிலேயே, காரைநகருக்குள் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக ஊடுருவித் தாக்குதலை நடத்தியுள்ளனர். இத் தாக்குதல் நேற்று முன்தினம் முன்னிரவில் இடம்பெற்றதாகவும் வாகனத்தில் வந்த கடற்படையினர் மீதே புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிய வருகின்றது. தாக்குதலுக்குள்ளான வாகனமும் பலத்த சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் தாக்குதலுக்குள்ளான கடற்படையினருக்கு உதவிக்கு விரைந்த படையினர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் அவர்கள் வந்த வாகனம் சேதமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகளின் இத் தாக்குதலில் சிறிலங்கா கடற்படையைச் சேர்ந்த நான்கு கடற்படை

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# புலிகளின் தாக்குதலுக்கு வடக்கில் இரு சிப்பாய்கள் பலி

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் முன்னணிப் படைத் தளங்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவ சிப்பாய்கள் பலியானதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாதகல் இராணுவ முகாம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் காவலரண் ஒன்றிலிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானார்.

மேலும் யாழ். குடாநாட்டிலுள்ள முன்னணி இராணுவ காவலரணில் இருந்த சிப்பாய் ஒருவரும் புலிகளின் தாக்குதலுக்குப் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை யாழ். குடாநாட்டில் புலிகள் தம்மை பலப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் எந்தவொரு தாக்குதலையும் எதிர் கொள்ளக் கூடிய தயார் நிலையில் இருப்பதாகவும் பி.பி.ஸி. செய்தியாளர் கூறுகிறார்.

## பொன்னாலை பகுதிநோக்கி இரவிரவாக தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகர் சிறிலங்கா இராணுவ-கடற்படை கூட்டு முகாமிலிருந்தும், மண்டைதீவு, தீவகப் பகுதிகளிலிருந்தும் அங்கு நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் நேற்று முன் தினம் இரவு பூராகவும் பொன்னாலை, மூளாய், சுழிபுரம், அராலிப் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலையும், கனரக பீரங்கித் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

தீவகப்பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# வடக்கில் இருந்து துருப்புக்களை மீண்டும் கிழக்கே அனுப்ப யோசனை

## புலிகளின் தாக்குதல் அதிகரிப்பாம்

(கொழும்பு)

கிழக்கில் மீண்டும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பதையடுத்து கிழக்கிலிருந்து வடபகுதிக்கு அனுப்பப்பட்ட இராணுவ பிரிகேட்டுகளை மீண்டும் கிழக்கிற்கு அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு இராணுவத் தலைமையகத்துடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாக தெரிய வருகிறது இருமாதங்களுக்கு முன் வடபகுதிக்கு இந்த இராணுவ பிரிகேட்டுகள் பாரிய இராணுவ நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டன இருந்தும் இதுவரை பாரிய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாத நிலையில் இவர்கள் வடபகுதி முகாம்களினுள் இருமாதங்களாக முடங்கிக் கிடப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது அரசாங்கத்தினுள் ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலையினால் வடபகுதியில் இப்போது பாரிய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளும் நிலையில் அரச உயர் மட்டம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் கிழக்கில்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

கொழும்புத்துறை பகுதி மக்கள் வாழ் விடங்கள் மீது நேற்று மாலை மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்தனர்

நேற்றைய தினம் மாலை 5.30 மணியளவில் மண்டைதீவு இராணுவத்தினர் கொழும்புத்துறை பகுதியை நோக்கி அடுத்தடுத்து மூன்று எறிகணைகளை ஏவினர் இதில்

## நாளை மூடப்பட்டிருக்கும்

பேராசிரியர் துரைராசா அவர்களின் மறைவையொட்டி அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகம், விசாரணைப் பகுதிச் செயலகம், யாழ்- வன்னி தொடர்புச் சேவைச் செயலகம் என்பன நாளை திறக்கப்படமாட்டாது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் அறியத் தந்துள்ளனர்.

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று காலை 9-00 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவிருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பணிப்பாளர் சபையினருக்கான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

… தில்பட்டு வெடித்தது. இதனால் தென்னைமரம் இரண் … னுள் வீழ்ந்து வெடித்தது

(5-ம் பக்கம் பார்க்க)

# கிளாலி நீரேரி ஊடாக பேராசிரியரின் பூதவுடல்

(கொழும்பு)

நேற்றுக்காலை 7.00 மணிக்கு பேராசிரியர் துரைராசாவின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து திறந்த வெளிப் பல்கலைக் கழக வளாகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு கூடியிருந்த தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பெருமளவிலான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

பேராசிரியரின் பூதவுடல் 9.30 மணிவரையும் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் இருந்த போது அஞ்சலி உரைகளும் இடம் பெற்றன. திறந்த பல்கலைக்கழக உப வேந்தரும், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடாதிபதியும், மற்றும் பேராசிரியர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இவர்கள் பேராசிரியர் கல்விக்கு ஆற்றிய பெ

( 5 ஆம் பக்கம் பார்க்க)

# பேராசிரியர் துரைராசா இறுதி அஞ்சலி நிகழ்வுகள்

அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுடைய புகழுடல் இன்று காலை 9மணிவரை பொது மக்களின் அஞ்சலிக்காக பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைக்கப்பட்டிருக்கும் இங்கு அஞ்சலி உரைகளும் இடம்பெறும்.

அஞ்சலி உரைகளைதுணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள் சார்பாகவும் பல்கலைக் கழகப் பேரவை சார்பாகவும்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# இன்று துக்கதினம் நாளை கதவடைப்பு

(யாழ்ப்பாணம்)

பேராசான் துரைராசா அவர்களின் மறைவையொட்டி இன்றும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதுடன் நாளை பூரண கதவடைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

நாளை அனைத்து வர்த்தக நிறுவனங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்கள் யாவையும் கதவடைப்புச் செய்து பேராசானுக்கு பூரண அஞ்சலி செலுத்துவர்.

மறைந்த பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு அனுதாபம் செலுத்துமுகமாக நாளை புதன் கிழமை சகல பாடசாலைகளையும் மூடி அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்துமாறு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கேட்டுள்ளார்.

## வரி விளம்பரம்

### புதிய வகுப்புக்கள்

YOGI H OME SCIENCE ACADEMY 15-6-94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant - Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. 71 B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர் (8530)

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, கை, வீடு, பார்த்தல் அதிர்ஷ்ட எண்மாற்றம் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி காலை முதல் மாலை வரை 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம்.

(8543)

### தவறிவிட்டது

நல்லநம்பி சுப்புலட்சுமி என்பவருடைய அடையாள அட்டை (598452385V) தொல்புரம் டச்சுவீதிக்கும், சுழிபுரம் நெல்லியான் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயம், அல்லது ஐ. தங்கராசா அந்தோனியார் கோவிலடி, டச்சுவீதி, தொல்புரம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும், சன்மானம்வழங்கப்படும். (சி:9670)

---

அமரத்துவமடைந்த

## பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு

# இதய அஞ்சலி



தன்னை ஈந்த மண்ணின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் தன் இன்னுயிரை அர்ப்பணித்த சேவை நாயகன் எல்லார் மனதிலும் பசுமையைப் படரவிட்டு மானிடத் தெய்வமாய் மறையாப் புகழுடன் அமரத்துவமடைந்த பேராசிரியர் **அ. துரைராசா அவர்களுக்கு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.**

**அனைத்து விடுதி மாணவர் ஒன்றியம்,**
**ஆண்கள், பெண்கள், விடுதி காப்பாளர்,**
**உபகாப்பாளர்கள்.**

(8554)

---

முன்னாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்

---

# நினைவு கூருகின்றோம்... 14.06-1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி--திருவையாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது நிகழ்ந்த எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தம்பா-சூட்டி** (இராமசாமி சங்கரப்பிள்ளை-தர்மபுரம்-கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட முல்லைத்தீவு - முள்ளியவளையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987-ம் ஆண்டு யாழ் - குரும்பசிட்டியில் மினி முகாம் தகர்ப்பு முயற்சியின்போது வீரச்சாவெய்திய,

**குமரிநாடன்** (சிறிரங்கன் விஜயபாலன் ராஜபுரம், முழங்காவில்-மன்னார்)

**லெப்.மதி** (இராசையா சிறிபத்மநாதன் - செக்காலை ஒழுங்கை, மானிப்பாய் வடக்கு)

**2-ம் லெப்.வின்சன்** (தியாகராசா ஞானகுமார்-கரணவாய் தெற்கு, கரவெட்டி யாழ்)

**தேவன்-வெள்ளை** (சற்குணராசா தேவராசா-மதவடி, வடலியடைப்பு-சங்கானை-மேற்கு)

**மஜீத்** (வரதராசா மங்களேஸ்வரன்-பொன்னாலை தெற்கு, சுழிபுரம்-யாழ்)

**சிக்கந்தன்** (சின்னத்தம்பி சேனாதிராசா-பாஸ்கரன் வீதி, கொக்குவில் கிழக்கு-யாழ்)

வடமராட்சிப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட ''ஒப்பறேசன் லிபறேசன்'' நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பூசாமுகாமில் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இதே பகுதியைச் சேர்ந்த 12 தமிழிளைஞர்கள்

1989-ம் ஆண்டு கிளி-வட்டக்கச்சிப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.தாஸ்** (செல்லப்பு விக்கினேஸ்வரன்-142, உருத்திரபுரம்-கிளிநொச்சி)

கிளி-பழையமுறிகண்டிப் பகுதியில் இந்தியப் படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப்.கதிரவன்** (கோவிந்து தேவராசா-குமரபுரம், பரந்தன்-கிளிநொச்சி)

1990-ம் ஆண்டு மட்டு-களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**லெப். சுதர்சன்** (சிவலிங்கம் ரவீந்திரன்-கிரான்-மட்டு)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**குரே** (- - - - - - -)

மாங்குளம் சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் கஜன்** (தியாகராசா பொன்னம்பலம்-மாமடு நெடுங்கேணி-மணலாறு)

**லோலோ** (செல்லத்துரை சிவதாசன்-பெரியகுளம், நெடுங்கேணி-மணலாறு)

**மேஜர் சிங்கன்** (இராசையா மகேந்திரன்-4-ம்வட்டாரம், புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**சிறி** (சுப்பிரமணியம் வரதன்-முள்ளியவளை-முல்லைத்தீவு)

**சசி-சிறி** (வல்லிபுரம் குணபாலசிங்கம்-ஒட்டிசுட்டான்-முள்ளியவளை)

**மகான்** (செல்லத்துரை சிவகுமார்-கனகன்குளம்-வவுனியா)

**சுரேன்** (கந்தையா சிவபாலன்-துடரிக்குளம் வீதி, செட்டிக்குளம்-வவுனியா)

**கப்டன் பனா** (தம்பிஐயா சசீந்திரன்-புகையிரத நிலையவீதி, கிளிநொச்சி)

**காமினி** (...)

---

## நினைவு அஞ்சலி
## பேராசிரியர் அ. துரைராசா

நெஞ்சில் கனிவும் நெடிதுயர்ந்த தோற்றமுமாய்
எங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் கோமானே!
நின் பிரிவால் வாடி நினைவிழந்து நிற்கின்றோம்
உன்னை வழுத்துகின்றோம் உன்புகழ்பாடுகின்றோம்

அன்ப!

நின் புகழ் உலகளாவியது .....
பொறியியற் துறையில்
சர்வ உலகமும் புகழும் மேதை நீ
உனது பெயரின் பின்னால் நீளும் பட்டங்கள்
பேராசிரியனாய் ...
பொறியியற் பீடத் தலைவனாய் .
பல்கலைக்கழக உபவேந்தனாய்
நீ அலங்கரித்த பதவிகள் எத்தனை?
நீ நினைத்திருந்தால் ...
சர்வதேச நகரங்களில் .....
மாடமாளிகைகளில் .....
உல்லாச வாழ்வு வாழ்ந்திருக்கலாம்
ஆனால்!
நீ உன் மண்ணை நேசித்தாய்;
மண்ணின் மைந்தர்களை நேசித்தாய்;
இக்கட்டான வேளையில்
மண்ணிற்காய் பணிபுரிய இங்கு வந்தாய்.

நெஞ்சில் கனிவும் நெடிதுயர்ந்த தோற்றமுமாய்
எங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் கோமானே!
நின்பிரிவால் வாடி நினைவிழந்து நிற்கின்றோம்
உன்னை வழுத்துகின்றோம்; உன் புகழ் பாடுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்.**
**பழையமாணவர்,**
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

(சி-9672)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி மாணவர்களின் செயற்பாடுகளனைத்திலும் நேரிற் கலந்து கொண்டும் அவ்வப்போது ஆலோசனை வழங்கியும் வந்த வடமராட்சியீன்ற பெருமகன், துணைவேந்தர் திரு.அ. துரைராசா அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம். அன்னாரின் பேரிழப்பால் தவித்துக் கொண்டிருக்கும் நாங்கள் எமது அனுதாபங்களைஅவரது குடும்பத்தினர்க்கும் ஏனையோர்க்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

-அதிபர், ஆசிரியர்கள், மாணவர், ஊழியர்,
பாடசாலை அபிவிருத்திச்சபையினர்,
பழைய மாணவர் சங்கம்.

யா/வட இந்துமகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

(சி-9673)

---

## கண்ணீர் அஞ்சலி
## துணைவேந்தர் அ. துரைராசா

அறிவின் சிகரமாய் பண்பின் பிறப்பிடமாய்
அமைந்த எமது நாட்டின் தவப்புதல்வனே
உம்மை இழந்து தவிக்கும் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**- பருத்தித்துறைக் கல்விக்கோட்டம்**

முன்னாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்

# அமரர் பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு எம்

# இதய அஞ்சலி



பட்டங்கள் பலபெற்று பதவிகளில் உயர்ந்தாலும்
ஏழைக்கும் நொந்தோர்க்கும் உற்றவனாய் இருந்து
நீர்வளம் பெருக்குதற்கு ஊற்றானாய் இங்கு
சொந்த மண்ணிற்கே உன் உழைப்பைத் தந்து
சோதனைகள் மத்தியிலும் சோர்வுறாது ஏழைக்குதவி
உழைப்பவர்க்கு வழிகாட்டி தாழ்ந்தோர், உயர்ந்தோர்
பேதம் நோக்காது கண்ணியத்தால், பேரறிவால், உயர்பண்பால்
உள்ளம் கொள்ளை கொண்ட உத்தமா -- உன்
புன்முறுவல் மாறாத பொன்முகத்தை
என்று நாம் காண்போம்?

**யாழ். மாநகர ஆணையாளரும்,**
**அலுவலர்களும்.**

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: 14-06-94 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்ப்பாண மாநகரசபையில் நடைபெறும் பேராசிரியரின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாநகரசபை பணியாளர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

(8556)

---

**கப்டன் பனா** (தம்பிஐயா சசீந்திரன்-புகையிரத நிலையவீதி, கிளிநொச்சி)
**காமினி** (பீற்றர் செல்வராஜ்-டிப்போவீதி-கிளிநொச்சி)
**சர்வா** (சுப்பையா குகனேஸ்வரன்-173, யோகபுரம்-கிளிநொச்சி)
**முகமட்** (ஐயாத்துரை குமாரதாசன்-கட்சன்வீதி, வட்டக்கச்சி-கிளிநொச்சி)
**வதனன்** (- - வட்டக்கச்சி-கிளிநொச்சி)

திருமலை- 3-ம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**முருகதாஸ்** (பஞ்சலிங்கம் புஸ்பாகரன். சாம்பல்தீவு-திருமலை)
**அர்ச்சுன்** (- - ஓட்டமாவடி-மட்டு)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**ரகுவரன்** (வேலு முருகேசு-இசைமலைத்தாழ்வு, முருங்கன்-மன்னார்)
**லெப். ரஞ்சன்** (பொ. சண்முகநாதன்-சன்னாசிப்பரந்தன்-கிளிநொச்சி)

இதேதினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**கலையன்** (கச்சுமுகமது அபுல்கஸன்-1-ம் வட்டாரம், புல்மோட்டை-திருமலை)

திருமலை-கிண்ணியாப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**தேவா** (ஞானப்பிரகாசம் விக்கினேஸ்வரன்-சிப்பித்திடல்-திருமலை)
**அன்ரன்** (இ. வசந்தகுமார்-முள்ளிப்பொத்தானை-மட்டு)

இதேதினம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**நளன்** (தியாகராசா உதயகாந்தன்-கொக்குத்தொடுவாய்-மணலாறு)

1991-ம் ஆண்டு வவுனியா-பூவரசங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**பிறேமன்** (திசைவீரசிங்கம் தவேந்திரன்-கனகராயன்குளம்-வவுனியா)
**ராஜின்** (பொன்னுத்துரை கிரிதரன் - அருள்வீதி, நாவற்குழி, கைதடி-யாழ்)
**லெப். ரவி** (குமாரசாமி சாந்திக்குமார் - துன்னாலை வடக்கு, கரவெட்டி-யாழ்)

வவுனியா-செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். வசுமதி** (தவநாயகி இராசநாயகம்-கற்சிலைமடு-ஒட்டிசுட்டான்)
**கப்டன் சுஜாத்தா** (அனுசியா யோகராசா-அல்வாய் மேற்கு, திக்கம்-பருத்தித்துறை
**லெப். ஜெயசீலி** (தர்சினி சுந்தரலிங்கம்-கடற்கரை வீதி-பருத்தித்துறை-யாழ்)

**2-ம் லெப். அருணா** (தவமணி சின்னையா-புலோலி தெற்கு, பருத்தித்துறை-யாழ்)
**ஜீவமலர்** (சிறிதுளசி கணேசசுந்தரம்-அரசடிவீதி, நல்லூர்-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட செங்கலடி 2ஐச் சேர்ந்த குழந்தை, வந்தாறுமூலை லேக்கவுஸ் வீதியைச் சேர்ந்த சிறுவன், மாவடி வேம்பைச் சேர்ந்த இளைஞன் ஆகிய 3 தமிழர்கள். வாழைச்சேனை-நாசியன் பகுதியில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**
**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(சி-966)

---

எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**- பருத்தித்துறைக் கல்விக்கோட்டம்**

(சி-9674)

---

## கண்ணீர் அஞ்சலி

மாணவர்களின் கல்வி வளர்ச்சி மேம்பாட்டிற்காக அயராது உழைத்த **பேராசிரியர் அ. துரைராசா அவர்கட்கு** எமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
வேலாயுதம் மகா வித்தியாலயம்

(சி-9675)

---

## கண்ணீர் அஞ்சலி

கல்வி உலகின் அறிவுச் சுடர் அணைந்து விட்டது. தமிழுலகின் வழிகாட்டியான பேராசானை நாம் இழந்து தவிக்கின்றோம். அவர் ஆன்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/தம்பசிட்டி,
மெ. மி. த. க. பா.
பருத்தித்துறை.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்,**
**நலன்விரும்பிகள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.**

(சி-9676)

Nallur Branch Library

# ஐ.தே. கவுடன் இணைவது தவிர்க்க முடியாததாகும்

## பிரேமச்சந்திரா சந்திரிகாவுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணசபை அமைச்சர் பிரேமரட்ண குணசேகரவை அவ் அமைச்சு பதவியில் இருந்து நீக்குவதற்கு முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க எடுத்த முடிவு ஓர் மூர்க்கத்தனமான- முட்டாள் தனமானமுடிவுஎனஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ஜீ.எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. சி சேவைக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில், ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த சிறிலங்கா மக்கள் தயாராக இருக்கும் ஓர் நிலையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் எதிர்காலத்தை கட்டி எழுப்ப வேண்டி இருப்பதாலும் எனவே நாம் இது தொடர்பாக சில முன்னோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், மேல் மாகாணத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் நாம் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு செல்வது தவிர்க்க முடியாதது ஆகிவிடும் எனதிட்டவட்டமாக தான் கூறவிரும்புவதாக தெரிவித்துளார்

எனவே மேற்படி அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா மீது நம்பிக்கையில்லாதீர்மானத்தை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கொண்டு வரப்போவதாகவும் இதற்கான அனுமதியை நேற்று முன்தினம் கூட்டப்பட்ட செயற்குழு கூட்டத்திலும் நிறைவேற்றப்பட இருக்கிறதுஎனவும் அவர்கூறினார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியிலும் ஜன நாயக ஐக்கியதேசிய முன்னணியிலும் புரிந்துணர்வின் அடிப்படையில் ஏற்பட்ட ஒத்துழைப்பு சந்திரிகா குமாரணதுங்காவினால் முறியடிக்கப்பட்டு விட்டதாக சுட்டிக்காட்டினார்.

அதாவது மேல் மாகாணசபையில் ஜனநாயக ஐக்கிய முன்னணி சகல உறுப்பினர்களுக்கும் நாம்அறிவித்தல் விடுத்தோம். உடனடியாக சந்திரிகா குமாரணதுங்கா எடுத்த தீர்மானத்தை எதிர்க்குமாறும், இதற்கு எமது உறுப்பினர் பதினேழு பேரும் கையெழுத்து இடவேண்டும் என நாம் முடிவு செய்துள்ளோம். அவர்கள் எமது தீர்மானத்திற்கு சார்பாக பேசவேண்டும். அதே போன்று ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளோம். இதனை செய்ய தவறுபவர்களுக்கு எதிராகக்கட்சி சட்ட விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி எம்முடன் கூட்டு சேர எடுக்கும் முதல் காரணமாகவே காமினி ஜயவிக்கிரம பெரேராவை வடமேல் மாகாணசபையில் இருந்து நீக்கியதாக கருதுகின்றேன். ஒரு கட்சி எதிர்க்கும் போது இன்னோர் கட்சி ஆதரிக்கும். இதுவே இன்றைய அரசியல் நிலைஎன தெரிவித்தார்.

எனவே காமினிதிசாநாயக்கா சென்ற பாதையிலே மிக விரைவில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரேமசந்திர அணி செல்வதாகவே கருத முடியும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## தலைமன்னார் பகுதியில் இளைஞர் கைது தொடர்வு

(மன்னார்)

தலைமன்னார் பகுதியில் இளைஞர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன. இரவு நேரம் படையினர் வீடு வீடாக தேடுதல் நடத்துகின்றனர்.

அண்மையில் தலைமன்னார் கடற்படையினர் தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த 11 இளைஞர்களையும் பேசாலையை சேர்ந்த ஒருவரையும் இரவு வேளையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்து மன்னார் சி ஐ டி பொலிசாரிடம் கையளித்துள்ளனர். இதனால் இப்பகுதியில் மக்களிடையே பதற்ற நிலை தோன்றியுள்ளது.

## மூதாட்டி காதணி பறிப்பு நான்காயிரம் குற்றப்பணம்

### பருத்தித்துறை நீதிமன்று தீர்ப்பு

வீட்டில் இருந்த மூதாட்டி ஒருவரின் ஒரு சோடி காதணிகளை பறித்துச் சென்ற ஒருவரை பருத்தித்துறை காவல் துறையினர் தேடிப்பிடித்து நீதிமன்றின் முன் ஆஜர் செய்தனர்.

கரவெட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் வேதவனம் என்ற மூதாட்டியிடமிருந்து தோட்டை திருடிய நபரை பருத்தித்துறை நீதியாளர் பிரதீபா விசாரணை செய்த பின்னர் இந்நபருக்கு 4 ஆயிரம் ரூபா குற்றமும் அத்தோடு 15 நாட்கள் கட்டாய சமூக சேவை செய்யும்படியும் தீர்ப்பு வழங்கினார். (யோ)

## கிராமியப் பாசறையில் செய்முறை விளக்கங்கள்

அண்மையில் புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு கிராமங்களில் நடைபெற்ற கிராமியப் பாசறை கண்காட்சியின் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப்பகுதியினரால் சக்திவலு சம்பந்தமான செய்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இக் கண்காட்சியில் மனித வலுச் சுழற்சிப் பொறிகள் மூலம் வானொலி இயக்குதல் ஆக்கிவாயு மூலம் நீரிறைத்தல் சூரிய சக்திமூலம் நீர் கொதிக்கவைத்தல், இரட்டைச் சூட்டடுப்புப் பாவித்தல் போன்றவற்றில் மக்களுக்கு செய்முறைப்படி விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

அங்குள்ள மக்களுக்கு இலவசமாகவும் கடனடிப்படையிலும் பணத்திற்கும் இரட்டைச் சூட்டடுப்புகளும் அமைத்துக்கொடுக்கப்பட்டன

அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ள இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மரம் வெட்டியவர்களுக்கு நீதிமன்றம் தண்டனை

தமிழீழ காவல்துறையினரின் அனுமதியின்றி பச்சை மரம் வெட்டிச் சென்ற எட்டுப் பேருக்கு எதிராக நாகர்கோயில் காவல்துறையினர் பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

துன்னாலை கரணவாயைச் சேர்ந்த மேற்படி எட்டுப் பேரும்ஆயிரத்துஅறுநூறுரூபா பெறுமதியான பச்சை மரத்தை எடுத்துச் சென்ற குற்றதிற்காக நீதியாளர் பிரதீபா ஒவ்வொருவருக்கும் மூவாயிரம் ரூபா குற்றமும் தவறின் அனைவருக்கும் 120 நாட்கட்டாய சமூக சேவையில் ஈடுபடுத்துமாறும் தீர்ப்புக் கூறினார். [யோ]

## யாழ். குடாநாடு முழுவதும் சோகத்தில் மூழ்கியது

(யாழ்ப்பாணம்)

பிரபல கல்விமானும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன் ...

தமிழீழத் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்ததையும் காணக்கூடி ...

## மெய்வல்லுநர் போட்டி

(தென்மராட்சி)

கிளி-பளை தர்மக்கேணி அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. பகல் 2 மணிக்கு ...

## பஜிரோவில் வந்தவர்களிடம் 11 லட்சம் ரூபா கொள்ளை

### கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

பஜிரோ வாகனத்தில் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதுடன் அவர்களிடம் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது,

கொள்ளுப்பிட்டி அப்துல் கபூர் மாவத்தையில் நடைபெற்ற இச்சம்பவத்தில்சுமார் பதினொரு லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டதாகவும் வெள்ளை நிற நிசான் வாகனத்தில் வந்தவர்களே இக் கொள்ளையை நடத்தியதாகவும்தெரிவிக்கப்படுகிறது,

## சொத்தி உபாலிக்கு உதவிய பிரமுகர் விபரம்வெளிவரும்

பாதாள உலகின் மன்னன் என படும் சொத்தி உபாலியுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் முக்கியத்தர்கள் சிலரின் பெயர் விபரங்கள் விரைவில் வெளியிடப்படுமென பொலிஸ் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. முக்கிய பிரமுகர்களின் உதவியுடன் துவக்குகள், கைக்குண்டுகள், குண்டுகள் மற்றும் வாகனங்கள் வசதிகளை சொத்தி உபாலி குழுவினர் எங்கிருந்து பெற்றனர் என்பது இப்பெயர்ப் பட்டியல் வெளியாகும் போது தெரியவரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


24-வது

பிறந்தநாள் நினைவலைகள்



கப்டன் குமரநாதா

(ஆனந்தசாமி ஆனந்ராஜ்)

தாயின் மடியில் வீரச்சாவு

3-ம் ஆண்டுநினைவலைகள்



2 ம் லெப்டினன்ட அருணா

(நவமணி - சின்னையா)

அன்னையின்மடியில்முத்தாக: தமிழீழமண்ணில்வித்தாக:

17 - 2 - 1969 14 - 6 - 1991

ஓ நவம் உன்
மறைவோ கனவானது- உன்
நினைவோ நிலையானது - எம்
விழி நீர் வற்றி
மூன்றாண்டானாலும் - உன்
விழிதேடிக் கொண்டேயிருப்போம்.

- குடும்பத்தினர்.

கொடிகாம வீதி,
புலோலி தெற்கு, புலோலி. (8545)

3-ம் ஆண்டுநினைவலைகள்



(யாழ்ப்பாணம்)

பிரபல கல்விமானும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி குடாநாடு முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

பேராசிரியரின் மறைவையடுத்து யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சோகத்தின் வெளிப்பாடுகளை அவதானிக்க முடிகிறது. யாழ். பல்கலைக்கழகம் உட்பட அனைத்துக் கல்விநிறுவனங்களிலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருக்கின்றன அத்துடன் யாழ். நகரப் பகுதிகளிலும் குடாநாட்டின் பிரதான வீதிகளிலும் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வீதிகளின் குறுக்காக கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவற்றைவிட வடமராட்சிப் பகுதிகள் எங்கும் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் சோகத்தை வெளிக்காட்டிக்கொண்டிருந்தன.

இவ்வாறு குடாநாட்டின் மூலை முடுக்கெல்லாம் சோகவுணர்வின் சுவடுகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அலுவலகங்களிலும் ... அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. இவற்றைவிட குடாநாட்டில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களும் தமது வகுப்புக்களை ஞாயிறு ரத்து செய்தன.

அத்துடன்ஞாயிறன்றுமுதல் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறவிருந்த பல கலை நிகழ்ச்சிகள் மற்றும் களியாட்ட விழாக்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

மேலும் வடமராட்சியில் உள்ள பேராசிரியரது இல்லத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் சென்று அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் குடாநாட்டில் இயங்கும் பொது அமைப்புக்க வெகுஜன ஸ்தாபனங்கள் உட்பட அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் அனைத்தும் பேராசிரியரின் மறைவு குறித்து தமது அனுதாபங்களைத் தெரிவிக்கும் வகையில் அனுதாபச் செய்திகளை வெளியிட்டன. (க)

... 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. தே. இரட்ணகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (86)

## குணா படிப்பகம்

பூநகரி ஒப்பரேசன் தவளை தாக்குதலில் வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட முன்னாள் தென்மராட்சிக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் லெப். கேணல் குணா அவர்களின் ஞாபகார்த்தமாக பளை - இந்திரபுரம் சந்தியில் அண்மையில் லெப். கேணல் ''குணா படிப்பகம்'' ஒன்று பொதுமக்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (86)

## சிறுவர் நாடகம் முதலிடம்

யாழ் கல்வித் திணைக்களம் வலயம் 1ல் நடைபெற்ற தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் கல்வியங்காடு இ. த. க. பாடசாலை சிறுவர் நாடகத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

## இளைகளை புனரமைக்க ஐக்கிய தேசிய கட்சி முயற்சி

(கொழும்பு)

இவ் வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் தொடர்பாக புதிய நடைமுறைகளை கடைப்பிடிக்கவேண்டும் எனவும் உடனடியாக இதனை அமுல்படுத்த வேண்டும் எனவும் ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சகல தொகுதிகளிலும் கிளைகள் புனரமைக்கப்படவேண்டும் என்றும் ஒவ்வொரு தொகுதி கிளைகளிலும் பத்தாயிரம் பேருக்கு மேல் புதிய அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டஅவர் ஒவ்வொரு தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் மாகாணசபை உறுப்பினர்கள் நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஒவ்வொரு பகுதியையும் தமது ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசமாகவைத்திருக்க வேண்டும் எனவும் குறிப்பாக இளைஞர்களை பிரதிநிதித்துவம் செய்யவேண்டும் எனவும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## இரட்டை சூட்டடுப்பு

இந்த ஆண்டு யாழ் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 15000 சிக்கன இரட்டைச் சூட்டடுப்புக்களை கட்டிமுடிக்கும் திட்டம் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு சக்திப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்காக மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உற்பத்திக் குழுப்பகுதியிலும் குறைந்தது 50 அடுப்புகள் என்ற எண்ணிக்கையில் இவ் அடுப்புக்கள் கட்டப்படுவதோடு, வசதி குறைந்தோருக்கு கடனடிப்படையிலும் இவ் அடுப்புக்களை கட்டி வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

தாயின் மடியில் 14-06-1970 | வீரச்சாவு 24-12-1992


உன் கனவுகள் நினைவாகட்டும்
உன் இலட்சியம் நிறைவேறட்டும்
இந்த மண்ணைக் காத்த வீரனே
உன் நினைவு எம்மைவிட்டு அகலாது

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
தம்பிமார், தங்கைமார், மருமகன்.

பழைய பாற்சாலை ஒழுங்கை,
இணுவில் மேற்கு. (8553)

---

# 1 ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
02 - 02 - 1936

உதிர்வு:
4 - 06 - 1993

அமரர்

## பேதுருப்பிள்ளைகபிரியேற்பிள்ளை


(முன்னைநாள் ஜிம்னாஸ்டிக் அணி பயிற்றுனர் யாழ். பல்கலைக்கழகம்)

பண்பின் சிகரமாய்
அன்பின் வடிவமாய்
எம்முடன் கலந்த தந்தையே
ஆண்டு ஒன்று வரலாம்
உமது நினைவுகள்
எமது இதயத்தில்
நிரந்தரமாய் என்றும் என்றும்

நினைவுகளுடன்
★ ஜிம்னாஸ்டிக் அணி
யாழ். பல்கலைக்கழகம்

(8542)

---



## லெப்டினனட் ரவி
(குமாரசாமி சாந்திக்குமார்)

மழலையாய்: 30 - 11 - 1972 | மாவீரனாய்: 14 - 06 - 1991

காலனை காலாலுதை யென்ற பாரதி
போல நீ ஆற்றிப்பகை முகம் வென்று
சாலவே தலைவன் மனமது மகிழ
வேங்கைநீ விரைந்து விடுதலைப் பாதை
தூங்கிடாத் திருவிழி காத்திடு வழியில்
தமிழரின் தாகம் தீர்த்திடுமாறு நீஆற்றிய
அரும்பணி மனமதில் மகிழ்ந்திடு வேளை
பூவரசங்குள மோதலில் உன் பெயர்
மாவீரனாகிய தாமோ - மாவீரா -
மறக்கிலோம் பணியதை மனமதிற் கொண்டு
துதிக்கின்றோம் தொடர்வோம்
உன்வழி எம்மனம் நாடியே செல்லும்.

- குடும்பத்தினர்.

சாந்திக்குமார் வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி. (8533)

## க. பொ. த.(உயர்தர) கணித பாடக் கருத்தரங்கு

1994 இல் இரண்டாம் தடவையாக க. பொ. த. (உயர்தர) தூய கணித பாடத்திற்குத் தோற்றும் பாடசாலை மாணவர்க்கான கருத்தரங்கொன்றினை யாழ் வலயம் 01 கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் கணிதப் பிரிவானது யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் (15 - 06 - 94) காலை 8. 30 மணி தொடக்கம் மாலை 3. 30 மணி வரை நடாத்தவுள்ளது

1993 ஆம் ஆண்டு தூய கணித பாடவினாக்கள் ஆராயப்பட்டு, அவற்றிற்கு எவ்வாறு பொருத்தமாக விடையளித்தல் வேண்டும் என்பது பற்றி பிரதம பரீட்சகரும், யாழ் பல்கலைக்கழக கணிதப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு. பொ. மகினன் அவர்களால் கருத்துரை வழங்கப்படும்

பங்கு பற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் 1993 ஆம் ஆண்டு தூயகணித (1, 11) பாட வினாக்களுக்கு விடையளித்து அவற்றையும் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதற்கு முன் இடம் பெற்ற கருத்தரங்கில் பங்குபற்றாதவர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

## வடமேல் மாகாண ஆட்சி விரைவில் மாற்றம்?

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையில் ஆட்சிமாற்றம் விரைவில் ஏற்படும் என்றும் அதற்காகவே காமினி ஜயவிக்கிரம பெரேரா பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்டார் என ஐ.தே.க பொதுச்செயலர் டாக்டர் விக்கிரம வீரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய கட்சி தலைமை காரியாலயமான சிறி கொத்தாவில் நடைபெற்ற காமினி ஜயவிக்கிரமபெரேராவை வரவேற்கும் கூட்டத்திலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

காமினி திசாநாயக்காவின் நடைமுறையைப்பின் பற்றி வடமேல் மாகாண சபை ஜனநாயகஐக்கியதேசிய முன்னணி உறுப்பினர் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அங்கு பேசிய காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

## மேய்ச்சல் தரை புல் வளர்ப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வன்னி மாவட்டப் புதுமுறிப்பு என்னும் இடத்தில் மேய்ச்சல் தரைத் திட்டத்தின்கீழ், பரீட்சார்த்த முறையில் புல் நடுகை செய்து பராமரிப்புடன் வளர்க்கப்பட்டு வருகிறது.

இங்கே நடப்பட்ட புல் நல்ல வளர்ச்சி நிலையில் காணப்படுகிறது, அத்துடன் இங்கே ஊடு பயிராக வாழை பயிரிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தை விரிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 13 ஐ தவிர்க்க அரசு முடிவு

பதின்மூன்று என்னும் எண்ணை துரதிட்டம் பிடித்த ஒரு எண்ணாக கருதி அந்த எண்ணைத் தவிர்ப்பது என்று சிறிலங்கா அரசு முடிவு செய்துள்ளது. மோட்டார் வாகனங்களின் எண்கள், 13 இல் ஆரம்பமாகும் எண்களையும், கூட்டு எண் 13 ஆக வரும் எண்களையும் தவிர்ப்பது என்று சிறிலங்காவின் மோட்டார் வாகனப் பதிவு அலுவலகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.


பேராசிரியர் அழகையா துரைராசா

அவர்களுக்கு

### எமதுஇதய அஞ்சலிகள்

கற்றதனால் கல்வி பெற்ற பயன் யாவும்
மற்றவர்க்கே ஆக்கும் மாண்பு நிறை மேலோன்
மூண்ட பெரும் போரால் மோதுமிடர் வந்தும்
நீண்ட பெரும் வல்வை வீசு கடுங் காற்றில்
தாண்டி மிதிவண்டி தானுமுதைந் தோடி
தன்னினத்தின் துயரில் தனக்குரிய பங்கை
இன்முகத்தினோடு ஏற்ற எழில் வேந்தன்
இன்று இங்கு இல்லையென ஏங்கிடுமிவ் வேளையிலும்
பீடு புகழ் சேர போயுறங்கும் அவர் ஆன்மா
கூடிடவே நற்பதத்தை என வேண்டுகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

பனை தென்னை வள அபி கூ. சங்கங்கள்.
பனை தென்னை வள அபி. கூ. ச.
கொத்தணிகள்
வடமாகாண ப. தெ வ. அ. கூ. ச. சமாசம்

முக்கிய குறிப்பு:- இன்று 14-06-94 நடைபெற விருந்த வாராந்த மாநாடு எதிர்வரும் 17-06-94 வெள்ளிக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(சி- 9669)



### 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி அமிர்தமலர் ரவீந்திரன்

(அமுதா)

அவனிக்கு 1963.12-27

அங்கினிக்கு 1994-05-15

மாதமொன்று போனாலும் மாறவில்லை உன்நினைவு
வேதனையில் துடிக்கின்றோம் விம்மி அழுகின்றோம்
பூதலத்தை விட்டு நீங்கி பொன்னுலகு போனவளே
யாதும் எம்மை ஆற்றிடுமோ யாம் உம்மை மறப்போமோ

கற்குள ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம். (8550)

கணவன், பெற்றோர், சகோதரர்கள்.



கலாலயாவின்

மனைப்பொருளியலும் கைத்திறனும்

### பொருட்காட்சி

- ★ உள்ளூர் உணவுகள்
- ★ தைத்த ஆடைகள்
- ★ கைப்பணிகள்
- ★ செயற்கை மலர்கள்
- ★ கேக் அலங்காரம்

காலம்: ஜூன் 18-ம், 19-ம் 20-ம் திகதிகளில்

நேரம்: காலை 10 --- மாலை 6 வரை

இடம்: விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி-9661)



அமரர் பேராசிரியர்

அ. துரைராசா அவர்களுக்கு

உள்ளூராட்சியின்

### கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக் கழகத்தின் படலையைப் பாமர மக்களுக்கும் திறந்து வைத்த பேரறிஞனே! நீ நீடு வாழ்வாய்!!

அன்னாரை இழந்து நிற்கும் மனைவி மக்களினதும், உற்றாரினதும் தமிழினத்தினதும் துயரில் நாமும்பங்கு கொள்ளுகின்றோம்.

உள்ளூராட்சித் திணைக்களமும்
உள்ளூராட்சி மன்றங்களும்.
யாழ்ப்பாணம்.- கிளிநொச்சி
மாவட்டங்கள்

யாழ்ப்பாணம்.
94 . 06 . 13 (சி9666)



### கண்ணீர் அஞ்சலி

சிறந்த கல்விமானும்

முன்னைநாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரும்,
எமது பாடசாலை மாணவன்

செல்வன் து. அழகேஸ்வரனின் தந்தையுமான



### கண்ணீர் அஞ்சலி

அமரத்துவ மெய்தி விட்ட யாழ். பல்கலைக் கழகத்தின்
முன்னை நாள் உபவேந்தரும், போர்க்கால சூழலிலும் எம் மண்ணின்
உயர்கல்வியின் உந்துசக்தியாக விளங்கியவருமாகிய,

## பேராசிரியர் அழகையா துரைராசா

அவர்கட்கு

## எமது இதய அஞ்சலி



## நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் வேண்டும்,

★ நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
★ நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
★ நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
★ நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்,

**உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் வியாழன் 16 - 6 - 94 அல்லது வெள்ளி 17 - 6 - 94 காலை 10 மணிக்கு**

கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**உட்கட்டுமானப் பகுதி,**
**தமிழீழ பொருண்மிய**
**மேம்பாட்டு நிறுவனம்**

**இல. 10, செப்பியன் வீதி,**
**கொக்குவில்.**

(சி-9649)

---

## பேராசிரியர் அழகையா துரைராசா

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள்**

**மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்.**

**ப. அ. சபை.**

யா/ நெ. மெ. மி. த. க. பாடசாலை.

(8548)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர்

பேராசிரியர்

## அ. துரைராசா அவர்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்



" முழுமையாக அறுபது அகவைகள் முடியுமுன்னே,
தமிழீழத்தின் முழுமதி மறைந்த தேனோ ?
பெருமையாகத் தமிழர்கள் பெற்றிட்ட
பெரும்பேறு, பேசாமல் முடிந்ததேனோ? "

யாழ்ப்பாணம், நல்லூர்
(8546) கல்விக் கோட்டத்தினர்.

---



தமிழீழத் தாயினதும் கல்வி உலகினதும், ஆற்றொணாத் துயரில் இணைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

| சுவையருவி | எழிலகம் | சுவையருவி |
| --- | --- | --- |
| லெப். கேணல் இராசன் தெரு, யாழ்ப்பாணம். | லெப். இளங்கோ தெரு, யாழ்ப்பாணம். | பேருந்து நிலையம் நெல்லியடி. |

(சி-9664)

---

## பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு

# இதய அஞ்சலி



தலைசிறந்த கல்விமானும் எமது தேசத்தின் உயர் கல்விக்காக அயராது உழைத்து அரும்பெரும் சேவையாற்றியவரும், சிறந்த தேச பக்தரும் மாமேதையுமான அமரர் பேராசிரியர் அ. துரைராசாவுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(சி-9663) - நல்லூர் வணிகர் கழகம்

## சிந்தனைக்கு

அடக்கப்படுபவர்கள் அதற்கு பணிந்து செல்லும் போதுதான் ஆதிக்கம் வலுப் பெறுகிறது.

- காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 14-06-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் .50

## சமாதானத்தின்பால் அரசின் கவனமில்லை

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு தன்னாலான உதவிகளைச் செய்யத் தயாராக இருப்பதாக ஜப்பானும் அறிவித்துள்ளது. இனப்பிரச்சினை தொடர்பாக ஜப்பானில் அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்து தரத் தயாராக இருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது. இதன் மூலம் நோர்வே, அவுஸ்திரேலியா, கனடா என்பனவற்றின் வரிசையில் ஜப்பானும் தற்பொழுது சேர்ந்து கொண்டுள்ளது.

ஜப்பானின் இம்முயற்சி குறித்து சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்பொழுது இது தொடர்பான கருத்தை அறிவதில் ஜப்பான் அரசாங்கம் ஈடுபாடும் காட்டி வருகின்றது. ஆனால் டி. பி. விஜேதுங்கா இது தொடர்பாக மௌனம் சாதிப்பதாகத் தெரிகின்றது. சிலவேளை முக்கிய உதவி வழங்கும் நாடு என்ற நிலையில், எழுந்தமான ரீதியில் எடுத்தெறிந்து நிராகரித்துவிடுவது நலனைப் பாதிக்கும் என்பது காரணமாக கலாம்.

ஆனால், டி. பி. விஜேதுங்கா கூறாதுவிட்டாலும், அவரின் அமைச்சரவையைச் சேர்ந்தவர்களின் பேச்சுக்களும், இராணுவத்தினரின் செயற்பாடுகளும் அவர்கள் இன்னமும் சமாதான முயற்சிகள் எவற்றிற்கும் தயாராக இல்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரம

# வெடிச்சத்தம் கேட்ட சில வினாடிகளில் குழந்தைகத்தியபடி நிலத்தில் புரண்டது

### நேரில் கண்டவர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

வெடிச்சத்தம் கேட்ட சில வினாடிக்குள் முற்றத்தில் தவழ்ந்துகொண்டிருந்த குழந்தை வீரிட்டுக் கத்தியவாறு நிலத்தில் புரண்டது. அப்போது அதன் தலையிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது. என்னால் எதுவுமே செய்யமுடியவில்லை

இவ்வாறு நேற்று மாலை வேளை கொழும்புத்துறைப் பகுதியில் மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது படுகாயமடைந்த குடும்பத்தினரின் உறவினர் ஒருவர் சோகம் ததும்பக் கூறினார்.

இக்கோர நிகழ்வு குறித்து அவர் மேலும் விபரிக்கையில்; மாலைவேளை எல்லோரும் சேர்ந்து முற்றத்தில் கதைத்துக்கொண்டிருந்தோம். அப்போது சற்றுத் தூரத்தில் கடற்கரையை அண்டி ஷெல் ஒன்று வெடிக்கும் சத்தம் கேட்டது.

கடந்த சில நாட்களாக ஷெல் அடி நடப்பதால் சற்று பதற்றமாக இருந்தது. அதனால் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று முடிவு எடுப்பதற்குள் திடீரென வெடிச் சத்தம் கேட்டது. இதன் போது முற்றத்தில் நின்ற தென்னைமரம் பெரிய சத்தத்துடன் முறிந்து விழுந்தது. அதேவேளை மண்ணில் தவழ்ந்துகொண்டிருந்த குழந்தை வீரிட்டுக் கத்தியவாறு நிலத்திலே சுருண்டு விழுந்து கத்தியது மற்றையவர்களும்இடுப்பையும் நெஞ்சையும் பிடித்தவாறு அலறினர்.

சில நிமிடங்களில் ஓடிவந்த அயலவர்கள் ஒவ்வொருவரையும் தூக்கி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

இதன்போது அம்மா நிலத்தில் கிடந்து கத்தினா. அவர் மற்றவர்கள் காயமடைந்துவிட்டார்கள் என்பதால் கத்துகிறா என நினைத்து எவரும் அருகில் செல்லவில்லை. இறுதியாக அவர் தான் சாகப் போவதாகவும் தன்னைக் காப்பாற்றும்படி கத்திய பின்பே அவரும் காயமடைந்துவிட்டார் என்பதை தெரிந்து கொண்டோம் என்றார்.

இச் சம்பவத்தின் போது தலையில் காயமடைந்த குழந்தை தலை மற்றும் முகம் முழுவதும் இரத்தம் தோய்ந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போது அங்கு நின்றவர்கள் மத்தியில் பெரும் பதற்றநிலை தோன்றியதுடன் குழந்தையை கொண்டுவந்தவர் அதனை காப்பாற்றும்படி டாக்டரிடம் கதறி அழுத சம்பவம் அனைவரது நெஞ்சங்களையும் உருக்கியது. (ச)

## ஷெல் தாக்குதலை நிறுத்த ஹமில்டனுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் குடியிருப்புகள் மீதான எறிகணைத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவிற்கு வேண்டுகோள்விடுத்துள்ளார்

இதேவேளை யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதிகள் நோக்கி சிறிலங்கா படைகள் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொழும்புக்கு அவசர செய்தி அனுப்பியுள்ளது.

## ஷெல் வீச்சில் இறந்தவர் விபரம்

நேற்று முன்தினம் குருநகர் தொடர் மாடிப்பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சில் இறந்த ஒருவரின் சடலம் உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சி. காசிநாதர் (50 வயது) 'துன்னாலை, கரவெட்டி) என்பவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# டி.பி.யின் பதில் கிடைத்ததும் புலிகளுடன் பேசுவேன்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக அமைச்சர் தொண்டமானும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் கூட்டாக தயாரித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்த யோசனை திட்டத்திற்கு அவரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்தில் தான் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

''இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பது எமது அனைவரினதும் தலையாய கடமையாகும், இதற்காகவே நாம் தொடர்ந்து முயற்சிக்கின்றோம்'' எனவும் அவர் கூறினார்.

இந்த யோசனைகளை ஜனாதிபதிக்கு இப்போது முன்வைத்திருக்கிறோம்இவை குறித்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை அறிய அவர்கள்முன்சமர்ப்பிக்கஇருக்கிறோம், மக்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொண்டபின்னரே அவற்றை அடிப்படையாக வைத்து பேச்சுக்களை ஆரம்பிப்போமென மேலும் அவர் தெரிவித்தார்.

## புலிகளின்

யினர் கொல்லப்பட்டதையும்

## அதிகாலை

## அடையாள அட்டைகளை

## மக்கள் ஐக்கிய முன்னணிக்கு பொ. ஐ. மு.செயலர் கடிதம்

(கொழும்பு)

மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையே விரைவில் பேச்சு வார்த்தைகள் நடைபெற இருப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. மு. ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் நடைபெறவுள்ள தேர்தல்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியைப் பலப்படுத்தும் நோக்குடன் மேற்படி பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல முன்னர் இது தொடர்பாக தன்னுடன் கருத்துப் பரிமாற்றம் மேற்கொண்டதாகவும் இதன் அடிப்படையிலேயேதான் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தான் மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுக்கு கடிதம் எழுதி அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஜனா. ஆலோசகரிடையே பெரும் கருத்துவேறுபாடு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி செயலகத்தில் இருக்கும் ஆலோசகர்களான அதிகாரிகளுக்கிடையில் பெரும் கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் முதலாவது செயலாளர் பதவியில் கே. எச். ஜே. விஜேதாசாவும், விசேட செயலாளராக விஜயவீரசூரியவும், இவர்களை விட சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகராக பிரட்மன் வீரக்கோனும், மற்றும் ஜெனரல் சேபால ஆட்டிகலவும் ஜனாதிபதியின் ஆலோசகர்களாகப் பதவி வகிக்கின்றனர்.

காமினியின் மீள்வருகையினைத்தொடர்ந்துஅவரது மைத்துனரான விக்கிரம வீரசூரியா முன்னணிக்கு வந்துள்ளதை தொடர்ந்து கே. எச். கே. விஜேதாசாவிற்கும், அவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின.

விஜேதாசாவின் அறைக்குள் வைத்து ஜனாதிபதியின் செயலாளர்கள், விசேட செயலாளர்கள், ஜனாதிபதியின் ஆலோசகர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான மாநாடு ஒன்றை நடத்த வீரசூரியா முனைந்ததைத் தொடர்ந்து கருத்து வேறுபாடுகள் அம்பலத்திற்கு வந்தன.

இம் மாநாட்டை நடத்துவதற்கு வீரசூரியாவிற்கு முறைப்படி அதிகாரமில்லை எனத் தெரிவித்த கே. எச். ஜே. இம்மாநாடு கூட்டப்படும் திட்டத்தை எதிர்த்து வருகிறார்.

திறைசேரி செயலர் பாஸ்கரலிங்கம் நாடு திரும்பும் வரை விஜேதாசாவின் பதில் கடமைகளை கவனிப்பதற்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்,

இதேவேளை விஜேதாசாவைசாந்தப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன மாநாடு நடத்துவதற்கு விஜயவீரசூரிய அதிகாரம் படைத்தவரல்ல என்றும் விஜேதாசா சுட்டிக் காட்டியுள்ளார்.

## யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட நீர் விநியோகத்திற்கான உபகரணங்களுக்கு அனுமதி

யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள நீர் விநியோகத் திட்டத்திற்கான உபகரணங்களைக் கொழும்பிலிருந்து எடுத்துவர பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளரின் கோரிக்கைக்கிணங்க யாழ். அரச அதிபர் இதற்கான அனுமதியை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இந் நீர் விநியோகத்திட்டத்திற்கான உபகரணங்கள் மற்றும் தேவைகளுக்கென சுமார் 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

## திருட்டு

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமானால் முன்னர் அரசு முன்வைத்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பேச முடியும் என வலியுறுத்திப் பேசியுள்ளார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே பேச்சுவார்த்தையில் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டும், புலிகள் இயக்கம் ஆயுதத்தைக் கைவிட வேண்டும் இவை இரண்டும் முக்கிய நிபந்தனையாக அவரால் வலியுறுத்தப்பட்டது.

சமாதானம் குறித்து அரசாங்கத்தின் நிந்தனை இவ்வாறு இருக்க யாழ். குடாநாட்டின் மீது கடந்தசில நாட்களாக சிறிலங்கா இராணுவம் நடத்தி வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி வருகின்றனர். இத் தாக்குதல்கள் அகதிமுகாம் மீதும், சந்தை மீதும், குடியிருப்புக்கள் மீதும் நடத்தப்பட்டும் உள்ளன. பொதுமக்களின் நிலைகள் மீது நடத்தப்படும் இத் தாக்குதல்கள் இனப் படுகொலைகளைத் தவிர வேறு நோக்கம் கொண்டதாக இல்லை.

அத்தோடு, மட்டுப்படுத்தப்பட்ட அளவினதான இராணுவ நடவடிக்கைகளையும் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. கடந்த சில வாரங்களாக வடமராட்சி கிழக்கில் தொடர்ச்சியாக பீரங்கி மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றவண்ணமுள்ளது. இதேவேளை, வலிகாமம் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவம் ஒரு தாக்குதல் நடவடிக்கையையும் நடத்தியிருந்தது.

இவற்றை அவதானிப்பின் சிறிலங்கா அரசின் நடவடிக்கையானது ஏனைய வெளிநாட்டவர் கோரிக்கை போன்றே ஜப்பான் அரசின் கோரிக்கைகளையும் அது ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்றே கூறலாம். ஜப்பான் அரசின் கோரிக்கையைப் பரிசீலிப்பதானால் அரசாங்கம் இவ்வாறானதொரு பதற்றமானசூழ்நிலையை உருவாக்க விரும்பியிருக்க மாட்டாது இது இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் இராணுவத் தீர்வையே நாடி நிற்பது புலனாகின்றது

இந்நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் டி. பி. விஜேதுங்கா அரசாங்கம் இனவாதத்தையே கையில் தூக்கிப் பிடிக்கப் போவதாகத் தெரிகின்றது. இனப்பிரச்சினை தொடர்பாக இராணுவத் தீர்வைத் தவிர, அவரிடம் வேறு மாற்றுத் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையினால், இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு என்பதற்கான எந்தவித சமிக்ஞைகளும் அரசிடம் இருந்து வெளிப்படும் என எதிர்பார்க்க முடியாது.

யாழ்ப்பாணம் சென்று விடு

## புலிகளின்

யினர் கொல்லப்பட்டதையும் ஆறு சிப்பாய்கள் காயமடைந்ததையும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதப்படுத்தின.

இதேசமயம் விடுதலைப்புலிகள் காரைநகர் தீவினுள் ஒரு வார காலத்திற்குள் மேற்கொண்ட இரண்டாவது இத் தாக்குதலானது பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொன்னாலை

த்த வண்ணம் இருந்தனர். அத்தோடு மண்டைதீவு முகாம்களிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் மேற்படி பகுதிகளின் பல இடங்களிலும் வீழ்ந்து வெடித்த வண்ணம் இருந்தன. இச் சம்பவங்களின் போது மக்கள் இரவில் பதற்றத்துடன் காணப்பட்டனராயினும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

மேலும் நேற்று அதிகாலை சுழிபுரம் கடற்பரப்பில் ரோந்து சுற்றிவந்த சிறிலங்கா கடற்படையினர் சுழிபுரம், பொன்னாலை கரையோரங்களை நோக்கி அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இந்த பீரங்கிகள் கடற்பரப்புக்களிலும், கரையோரங்களிலும் வீழ்ந்து வெடித்தன. இந்த கடற்படையினருக்கு உதவியாக காரைநகர், கசூரனாபீச், தூம்பில்பிட்டி காவல் நிலைகளிலுள்ள ஆயுதப் படையினர் மேற்படி பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர். இச் சம்பவத்தில் மீனவர்கள் தக்க பாதுகாப்பினைத் தேடிக் கொண்டதால் சேதங்கள் இன்றி தப்பித்துக் கொண்டனர். (41)

## வடக்கு

எஸ்.எச். ஹப்பு ஆராய்ச்சி துணைக் குவாட்டர் மாஸ்ரர் ஜெனரலாகவும் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

னார்.

இந்த யோசனைகளை

## அதிகாலை

வர்களுமாக நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

பேராசிரியரின் பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டதும் முதலில் பல்கலைக் கழகத்திலேயே அஞ்சலிக்காக வைக்கப்பட விருந்ததால் அதற்கான சகல முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பல்கலைக் கழக வளாகத்தில் கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் ஆங்காங்கே ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்டு சோககீதம் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. பூதவுடலை மக்களின் அஞ்சலிக்கு வைப்பதற்காக கைலாசபதி கலையரங்கில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன பூதவுடலுக்கு மலர் அஞ்சலி செலுத்துவதற்காக மலர் மாலைகளும் மலர்களும் மலர் வளையங்களும் எடுத்து வரப்பட்டு மேற்படி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன.

குழுமியிருந்த மக்கள் அனைவரும் சோகம் ததும்பிய முகங்களுடன் இன்று அதிகாலை வரை பேராசிரியரின் பூதவுடலின் வருகையை எதிர்பார்த்த வண்ணமிருந்தனர்.

அதிகாலை பேராசிரியரின் பூதவுடல் யாழ். பல்கலைக் கழகம் எடுத்து வரப்பட்டதும் பேராசிரியரின் பூதவுடலுக்கு அஞ்சலிசெலுத்தினர்.

## கொழும்புத்துறை

ஆயினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை மேற்படி எறிகணைக்கு இலக்காகி படுகாயமடைந்தோர் விபரம் வருமாறு: இரத்தினம் கதிரைமலைநாதன் (வயது 34) இவரது மனைவி சூரிய கலாவதி (வயது 34) இவர்களது மகளான ஆனந்தி(வயது 1 1/2) மற்றும் இவரது மாமியாரான பரராசசிங்கம் பூமணி (வயது 50) படுகாயமடைந்த இந் நால்வரும் சிகிச்சைக்காக யாழ், போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், (ச, சி)

ஆரம்பிப்போமென மேலும் அவர் தெரிவித்தார்.

# அடையாள அட்டைகளை உரியவர்கள் பெறவும்

(யாழ்ப்பாணம்)

பூநகரி ஆலங்கேணிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளவும். அடையாள அட்டையின் விபரங்கள் வருமாறு;

பொன்னம்பலம் முருகேசு மல்லாகம், பொன்னம்பலம் நிர்மலாதேவி மல்லாகம், சத்தியநாதன் கேதீஸ்வரி ஜீ.பி. எஸ் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். பாலச்சந்திரன் லோகராணி ஈச்சமோட்டை, குருநகர். அம்புறோஸ் அருளப்பு சேமக்காலை வீதி. குருநகர். திருமதி என், அருமைநாதன் (கல்வித் திணைக்கள அடையாள அட்டை), தவதேவராணி காசிநாதர் மந்துவில், தென்மராட்சி. இராசலிங்கம் தெய்வானைப்பிள்ளை நவரட்ணபுரம், கூனித்தீவு, மூதூர் என்னும் பெயருடைய இரண்டு அடையாள அட்டை, ராஜரட்னம் தயாநிதி மெதடிஸ் தேவாலயம் கல்லாறு. சபாரத்தினம் நிரஞ்சனா நயினாதீவு தெற்கு, நயினாதீவு. நோயெல் துரைரத்தினம் வேதநாயகம் ஆனந்த ராஜ கருணாமாவத்தைகொழும்பு. பசுபதி நாகம்மா இணுவில். மேலும் வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டுகள். நாகம்மா, லோகராணி காயத்திரி என்பவர்களுடையதும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வீரகத்தி சத்தியசீலன் மறவன்புலவு என்பவருடைய அடையாள அட்டையும் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பணவரவுச் சான்றிதழ் மற்றும் 93ஆம் ஆண்டுக்கான அனுமதி அட்டை என்பனவும் உள்ளன.

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவு குறித்த அஞ்சலிக் கூட்டம் இன்று முற்பகல் 9-00 மணிக்கு யாழ். மாநகர சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(பா)

## வடக்கில் இருந்து

புலிகள் மீண்டும் தாக்க ஆரம்பித்திருப்பது பாதுகாப்பு அமைச்சிற்கு பெரும் குழப்பத்தை தோற்றுவித்துள்ளது. கடந்த சில நாட்களில் கிழக்கில் நான்கு வெவ்வேறு இடங்களில் நடந்த தாக்குதல்களில் 9 படையினர் உயிரிழந்துள்ளனர்.

இதே சமயம் வடபகுதியில் இராணுவம் பாரிய நடவடிக்கை ஏதும் மேற்கொண்டால் அதனை எதிர்கொள்ள தயாராகும்படி விடுதலைப் புலிகளின் உயர் பீடம் கூறியிருக்கின்றது எனவும் கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

யாழ். மாநகரசபை ஆணை

## பேராசிரியர்

ஆசிரியர் சங்கம் சார்பாகவும் நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் பிரதிநிதிகள் உரைநிகழ்த்துவர்.

அதனை தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் பேராசிரியரின் புகழுடலை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பர்.

இதன் பின்னர் பேராசிரியரின் பூதவுடல் பலாலி வீதியால் ஆரியகுளம் சந்தி ஊடாக கண்டிவீதியைசென்றடைந்து அங்கிருந்து கண்டி வீதி வழியாக கொடிகாமம் வரை செல்லும் பேராசிரியரின் பூதவுடல் மானை வடமராட்சியில் உள்ள அவரது இல்லத்தைச் சென்றடையும். மறுநாள் பேராசிரியரின் இறுதிச் சடங்குகள் இடம்பெறும்.

## திருட்டு

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சையிலும் சுகாதார விழாவிலும் கலந்து கொண்ட மூவரது சைக்கிள்கள் திருடப்பட்டு விட்டதாக தெரிகிறது.

## 'மாகோ'

'மாகோ' கப்பலில் 7 ஆயிரத்து 200 மண்ணெண்ணெய் பரல்கள் எடுத்து வரப்பட்டு இறக்கப்பட்டு வருகின்றன.

மேலும் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் யூன் மாத ஓய்வூதிய வவுச்சர்களும் வந்து சேர்ந்தன. (யோ)

## கிளாலி

ரும் பணி பற்றியும், அவரது திறமைகள் பற்றியும் புகழாரம் சூட்டினர்

அதன் பின்னர் 10.15மணிக்கு இரத்மலானை விமான நிலையம் கொண்டுவரப்பட்ட பேராசிரியரின்பூதவுடல்11.20 மணியளவில் விமானம் மூலம் வவுனியாநோக்கிபுறப்பட்டது

சுமார் 12.15 மணியளவில் வவுனியா விமான நிலையம் வந்தடைந்த அன்னாரின் பூதவுடல், வவுனியா இணைந்த பல்கலைக்கழக வளாகத்தில் மக்கள் அஞ்சலிக்காக 1. 30 மணியளவில் இருந்து 2, 00 மணிவரையும் வைக்கப்பட்டது

இதை அடுத்து வவுனியா தடைமுகாமை 3. 30 மணியளவில் கடந்து சுமார் 5 30 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு அஞ்சலிக்காக 7.00 மணி வரையும் வைக்கப்பட்டது. இவ்வேளை, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 8.30 மணியளவில் ஆலங்கேணி வந்தடைந்த பேராசிரியரின் பூதவுடல் கடல் நீரேரி ஊடாக 11.30 மணிக்கு கிளாலி வந்தடைந்தது.

## மாகோவில் 284 தபால் பொதிகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்த 'மாகோ' கப்பலில் 284தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன. இவை நேற்று மாலை கப்பலில் இருந்து இறக்கப்பட்டன,(யோ)

முறைசாரா இற்கு உட்பட்ட கடன் வழங்க முன்வந்துள்ளன.

இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளருடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

## சனசமூக நிலையங்களுக்கான வேண்டுகோள்

பேரறிஞர் அ. துரைராசா அவர்களது மறைவையொட்டி அன்னாரைக் கௌரவிக்கும் முகமாக உங்கள் நிலையக் கட்டிடங்களின் மேலே கறுப்புக் கொடிகளை பறக்கவிடுவதோடு அன்னாரின் இறுதி நிகழ்வுகளிலும் பங்கு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாண - கிளிநொச்சி மாவட்டங்கள்

யாழ்ப்பாணம்
94-06-13 (சி-9667)

## திருத்தம்

08.06.94 அன்றைய ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமாகிய தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் விளம்பரப்படுத்தப்பட்ட பதவி வெற்றிடத்தில் காசாளர் தரம்306(15)பழையதுதரம்306(13) புதியது எனபிரசுரித்திருந்தோம் அதைதிருத்தி306(15) புதியது, 306 (13) பழையது எனவும், கல்வி தகைமைகளில் புதிய 15வது சம்பளத்தில் கடமையாற்றிய 2வருட அனுபவம்என பிரசுரித்திருந்தோம். அதைதிருத்தி புதிய 16 வது சம்பளத்தில் கடமையாற்றிய 2 வருட அனுபவம் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பொதுமுகாமையாளர்.
தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
கொடிகாமம்
(சி/ 9668)

## கண்ணீர் அஞ்சலி

சேவைநாயகன் மனிதத் தெய்வம்
அமரர் பேராசிரியர்
அ. துரைராசா அவர்களுக்கு
எங்கள் இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்

முக்கிய அறிவித்தல்

பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவினையொட்டி எமது கல்லூரியில் 14-06-94 இல் நடைபெறவிருந்த ஒன்று கூடல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. ஒன்றுகூடல் நிகழ்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## எமது அஞ்சலி



பேராசிரியர்
அழகையா துரைராசா

தோற்றம்: 10 - 11 - 1934
மறைவு: 11 - 06 - 1994

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவு எம்மை பெருந்துயரில் ஆழ்த்தியுள்ளது. இது எமக்கு ஈடு இணையற்ற இழப்பு ஆகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

மருத்துவபீட பீடாதிபதி, ஆசிரியர்கள்
ஊழியர்கள், மாணவர்கள்

(சி-9662)

## இதய அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் கல்விமானுமாகிய

உயர்திரு. பேராசிரியர் அ. துரைராசா

அவர்களின் மறைவையொட்டி சாவகச்சேரி

கைத்தொழில் வணிகர் மன்றத்தின் இரங்கல்

## மண்ணை மீட்கும் மகத்தான பணியுடன் பெண்ணை மீட்கும் பெரும்பணியும் நமதே

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 06 - 14**

**செவ்வாய் இரவு**

08-01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08-10 - அறிந்துகொள்ளுங்கள் - தகவற் களஞ்சியம்
08 20 - நலந்தானா "கண்நோயும் அது சம்பந்தமான ஆபத்துக்களும்"
08-30 - செய்திகள்
08-40 - கருத்துக்களம்- "சுறுசுறுப்பு"
08-50 - களமும் கானமும் -மன உறுதி

**1994 - 06 - 15**

**புதன் காலை**

07-02 - மாவீரவணக்கம்
07-15 - நீங்கள் கேட்டவை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

அமரர் பேராசிரியர் துரைராசா
அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி


அறிவுச்சுடரே! ஆற்றல் மிகு அண்ணலே,
எளிமையிலும் இனிமையிலும் உளம் நிறைந்த
- ஒளியே
நின் பணி நிலைத்திடும். நம் தமிழீழ நதில்
என்றினிக் காண்போம நெஞ்சம் நெகிழுதையா!

- வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி.

(8551)

அமரத்துவமடைந்த
முன்னைநாள் துணைவேந்தர்
பேராசிரியர் அ. துரைராசா
அவர்கட்கு

## எமது இதய அஞ்சலிகள்



மண் பற்றும் மொழிப்பற்றும் தானபெற்ற
மனிதர், இங்கே
விண்தொட்டு கல்வியில் விழுதிட்டவேந்தர்-இறுதி
மூச்சுள்ள வரையிந்த மண்ணிற்காய் உழைத்
தவர் - இன்று
கண்மூடிப் போய்விட்டார்; கலங்குகின்றோம்
நாமிங்கே!

மறுமலர்ச்சிக்கழகம்
யாழ். பல்கலைக்கழகம்

(8547)

(5890) உயர்தர மாணவர் மன்றம்
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

# மரண அறிவித்தல்கள்

## திரு. வல்லிபுரம் செல்லையா

(லண்டன் பென்சனியர்)

திரு. வல்லிபுரம் செல்லையா காலமானார். இவர் தெல்லிப்பளையை வசிப்பிடமாகக் கொண்டவரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், செல்வராசா, டாக்டர் யோகராசா (லண்டன்), சிறீகெங்காதரன், செல்வதி, அசோதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், டாக்டர் தேவகியின் (லண்டன்) அன்பு மாமனாரும், அகல்யா (லண்டன்), அசானி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [14-06-94] செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் வீதி, உரும்பராய் சுடீட்ச நூலக இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்வும்.

A. G. S. லேன்,
தெல்லிப்பளை.
(சி-9684)


தகவல்
மனைவி

## DR. முத்தையா தெய்வேந்திரராஜா

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட முத்தையா தெய்வேந்திரராஜா (கிராமிய வைத்தியசாலை ஆனைவிழுந்தான்) 12-06-94 அன்று புத்தளத்தில் காலமானார். அன்னார் செல்வராணியின் (வட்டுக்கோட்டை) அன்புக் கணவரும் ரமேஷ் (Bharain) மல்லிகா (2ம் வருடம் கலைப்பீடம் யாழ். வளாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முதலியார் ப. மு. சங்கரப்பிள்ளை (வட்டுக்கோட்டை) அவர்களின் மருமகனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
கு. யோகச்சந்திரன்
(யாழ் வளாகம்)

(8555)



அன்றலர்ந்த செந்தாமரை போல் அழகு முகம்
அதில தங்கும் வண்டனைய இரு விழிகள்
தேன் சொட்டும் அர்மலர் போல் இனிய வார்த்தை
ஈழம் எனும் முழுமதியைக் கண்டு உள்ளம்
இன்பத்தால் திளைக்கின்ற இனிய பூவேயானான் -
அரசு செய்யும் கொடுமையெனும் சேற்றின் மீது
அழகான அறிவென்னும் நீரைத்தேக்கி
பல்கலைக் கழகமெனும் பரந்த அத் தடாகம் தன்னில்
பக்குவமாய் மலர்ந்து நின்ற மாமலரே ஆனான் -
அழகான இவ்வினிய தடாகம் தன்னில்
எழிலான இம் மலர் மலர்ந்த தாலே
உலகத்து அறிஞர் எல்லாம் உவந்து போற்ற
கல்வியிலே இம் மண்ணும் உயர்வு பெற்று
கற்றவர் போற்றுகின்ற காவியம் ஆகினானே!

**-சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

1994- 06- 14 [சி- 9678)

அமரர்

## பேராசிரியர் அழகையா துரைராசா

(முன்னை நாள் துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)
அவர்களுக்கு
**கண்ணீர் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்**



மலர்வு
10- 11- 1934

உதிர்வு
11- 06- 1994

கொதிக்கும் தமிழுள்ளங்கள்
கொந்தளிக்கும் நெஞ்சங்கள்
தவிக்கின்றன! ஏங்கியழுகின்றன!
வடமராட்சி மண்தந்த
கல்வியதிபதியே கண் திறந்தால்
நாங்கள் மகிழ்ந்திடுவோம்
வாழ்த்தி வடிவு பார்த்து
ஏத்தினோம் - இன்று
இடியொன்று முன்வந்து
வடிவெடுத்து நிற்கின்றதே
வெடிக்கு முன் நீங்கள் - மீண்டும்
விரைந்திங்கே வந்திடுங்கள்
உங்கள் வருகை தனை எண்ணி
கண்கள் மூடவே மறுக்கின்றன.

**சமூகவிஞ்ஞான மன்றம்,**
**பொருளியற்துறை,**
**யாழ். பல்கலைக் கழகம்.**

(8549)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.